இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

YESUVAI THINAM PARKIREN

VOL 26 ISSUE 02 FEBRUARY 2026

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

## செம்பட்டியில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

தேவ செய்தியாளர்கள்



**Evg.L.வின்சென்ட்ராஜ்**
**Evg.கலா வின்சென்ட்ராஜ்**

நாள் :
**13,14**
பிப்ரவரி 2026
(வெள்ளி, சனி)

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.30 மணி வரை

இடம் : வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.

தொடர்புக்கு : 94428 00449, 94980 00449

## மதுரையில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்

பிப்ரவரி
**21**
மூன்றாவது
சனிக்கிழமை



நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.30 மணி வரை

இடம் : இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC டிப்போ அருகில்,
மதுரை மாவட்டம்.

தொடர்புக்கு
94428 00449, 94980 00449

**EVG.L.வின்சென்ட்ராஜ்,**
**EVG.கலா வின்சென்ட்ராஜ்**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த நாட்களில் எல்லாம் கர்த்தர் நம்மை கண்ணின் மணிபோல காத்து அற்புதமாய் நடத்தினார். கடந்த ஜனவரி 1-ஆம் தேதி வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் நடைபெறற புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டத்தையும், அதைத் தொடர்ந்து இரண்டாவது சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்திலும் தேவன் ஜனங்களை அபரிவிதமாக ஆசீர்வதித்தார். மேலும் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தை நம் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். சகோதரர் வின்சென்ட் செல்வகுமார் அவர்களை வல்லமையாக பயன்படுத்தினார். புதிதாக அநேக ஜனங்கள் கர்த்தரை அறிந்து கொண்டார்கள், ஏற்றுக்கொண்டார்கள். பிப்ரவரி முதல் வாரத்தில் திருப்பத்தூர் உபவாச முகாம் நடைபெறுகிறது. இது 75 ஆவது முகாம் ஏறக்குறைய 37 ஆண்டுகள் இந்த உபவாச ஜெபம் முகாம் தேவகிருபையால் நடந்து வருகிறது. இந்த முகாமை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், ஊழியர்களைக் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நம்முடைய மீடியா ஊழியங்களுக்காகவும், தினந்தோறும் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சிக்காகவும், இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சிக்காகவும் கருத்தாய் ஜெபிக்கவும். நம்முடைய அலுவலகத்திற்கு ஏற்ற உதவியாளர்கள் கிடைக்கவும், எல்லா ஊழியங்களையும் ஞானத்தோடு செய்யவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் ஏப்ரல் 30 மே 1, 2, 3 ஆகிய தேதிகளில் நமது சுவிசேஷ மையத்தில் நடைபெற இருக்கின்ற சுவிசேஷ எழுப்புதல் ஜெப முகாமையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் அநேகர் கலந்து கொள்ளவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நாம் அனைவரோடு இருப்பதாக ஆமென்.

**இயேசுவின் பணியில்**

L. Vincentraj

**(சகோ .L.வின்சென்ட்ராஜ்)**

சகோதரர்
L.வின்செண்ட்ராஜ்



# பொக்கிஷசாலையை திறப்பார்

ஏற்றகாலத்திலே உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார். உபா 28:12

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மேற்கண்ட வசனத்தில் (உபா 28:12) தேவன் அவருடைய பிள்ளைகளுக்கென்று பொக்கிஷ சாலையை வைத்திருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு உலகத்தில் உள்ள பொக்கிஷ சாலையெல்லாம் திவால் ஆகிறது, கஜானா காலியாகிறது. தேசங்கள் பஞ்சத்தால் பொருளாதார நெருக்கடியில் தள்ளப்படுகிறது. எல்லா நாடுகளும் கடனில் மூழ்கி, வரி சுமை அதிகமாகி கொண்டே போகிறது. இதனால் ஜனங்கள் பொருளாதாரத்தில்

சிக்கி தவித்து பசியும், பட்டினியமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் பொருளாதாரப் பிரச்சனை, களஞ்சியங்கள், பொக்கிஷ சாலைகள் குறைந்து வெறுமையாக இருக்கிறது. இப்படிப்பட்ட உலகத்தில் தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு தமது பொக்கிஷ சாலையை திறப்பார். அதிலிருந்து கோதுமை, எண்ணெய் போன்ற ஆசீர்வாதங்களை தருவார் என்று வாக்குக்கொடுத்து இருக்கிறார்.

இதைதான் பவுல் அடியாரும் வேதாகமத்தில் பல இடங்களில் சொல்லி யிருக்கிறார். கொலோசேயல் 2:3-ல் அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. ஆம் சகல ஆசீர்வாதங்களும் நிறைவுகளும் பொக்கிஷ சாலையில் நிறைந்து இருக்கிறது. அது எல்லாம் யாருக்கு? அவரை தேடி தொழுது கொள்கிறவர்களுக்கும், ஆராதிக்கிறவர்களுக்கும் தேவன் மனப்பூர்வமாய் கொடுக்கிறார். ரோமர் 10:12-ல் எல்லாருக்கும் கர்த்தரானவர், அவரை தொழுது கொள்கிற யாவருக்கும் ஐசுவரியச் சம்பன்னரா யிருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த ஐசுவரியம் உள்ள தேவன் அவருடைய பொக்கிஷ சாலையை திறப்பார். உங்களுக்கு, உங்கள் களஞ்சியங்கள் குறைந்து போய் இருக்கலாம். உங்கள் கையில் ஒன்றும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் தேவன் சகல சம்பூரணத்தினாலும் உங்களை நிரப்புவார். வேதத்தை வாசித்துப் பாருங்கள் நீதி 15:6-ல் நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதர, சகோதரிகளே தேவன் அவருடைய பொக்கிஷத்தை, அவருடைய ஐசுவரியத்தை உங்களுக்கு தரப்போகிறார்.

நீங்கள் உங்களுடைய செல்வத்தை நம்பி, உங்கள் பொக்கிஷத்தை நம்பி தேவனுடைய ஆசீர்வாதத்தை இழக்காதீர்கள். அவர் இந்த பூமியில் விலையெறப் பெற்ற பொக்கிஷமானவர், மிகப் பெரிய செல்வந்தர். விண்ணிலும், மண்ணிலும் அவரைப் போல் யாரும் இருக்க முடியாது. அவர் ஒப்பற்ற செல்வம். இன்றைக்கு மனிதனுடைய ஐசுவரியம், பணம், செல்வம் எல்லாம் இந்த பூமியோடு முடிந்து போகும். ஆனால் அவரே நித்திய பொக்கிஷமானவர். அந்த பொக்கிஷங்களை பெற நாம் தேவனிடத்தில் ஊக்கத்தோடு ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய கண்களுக்கு மறைவாய் இருக்கிற, இருதயத்தில் மறைந்திருக்கிற பொக்கிஷங்களை காண நமக்கு கண்களை திறப்பார். இதை தான் ஏசாயா 45:4-ல் பார்க்கிறோம் வெண்கல கதவுகளை உடைத்து, இருப்பு தாழ்ப்பாள்களை முறித்து அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன் என்றார். ஒளிப்பிடத்தில் இருக்கிற, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களை அவரைத் தவிர யாரும் நமக்குத் தர முடியாது, கொடுக்க முடியாது.

அவர் தமது பொக்கிஷ சாலையை திறக்க வேண்டும். தாவீதுக்கு திறந்தார், ஆடு மேய்த்த அவரை அரசனாக, ராஜாவாக உயர்த்தினார். அவன் ராஜ்யத்தில் தன் தேசத்தை, குடிமக்களை செழிப்பாக வைத்திருந்தான். யாரிடத்திலும் கையேந்தவோ, கடன் வாங்கவோ இல்லை. காரணம் தேவனைத் தேடி வாழ்ந்த அவரை தேவன் ஒளிப்பிடத்தில் உள்ள பொக்கிஷங்களைக் கொடுத்து நிரப்பினார், உயர்த்தினார். அதனால் அவர் தேவனுடைய சகல சம்பூரணத்தினாலும் நிரப்பப்பட்டார். அவருடைய மகனாகிய சாலமோனைப் பாருங்கள் அவரும் ஐசுவரியத்தினாலும், கனத்தினாலும்

நிறைந்து இருந்தார். தேவன் அவரை சகல பொக்கிஷங்களினாலும் நிரப்பியிருந்தார். அந்த தேவன் இந்த நாட்களில் அவருடைய பிள்ளைகளாகிய நம்மையும் நிரப்புவார். உங்களுக்காக தம்முடைய பொக்கிஷ சாலையை திறப்பார். போகட்டும் என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கிறது அதை நாம் யாருக்காக பயன்படுத்த வேண்டும், செலவிட வேண்டும் என்பதை பார்ப்போம்.

## தேவனே நமது பொக்கிஷம்

**உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். மத் 6:21**

இன்றைக்கு இந்த உலகத்தில் பணம், பொருள், சொத்தைக் காட்டிலும் தேவனே நமது பொக்கிஷமாக, செல்வமாக, ஐசுவரியமாக இருக்க வேண்டும். காரணம் வெள்ளியும், பொன்னும் அவருடையது. வானமும், பூமியும் அவருக்குச் சொந்தம். ஆகவே தான் இயேசு சொன்னார் லூக் 12:31-ல் பயப்படாதே, சிறு மந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் என்றார். நமக்காக ஜீவனையே கொடுத்து, யாவற்றையும் செய்த தேவன் மற்றவைகளை நமக்கு கொடுக்காமல் இருப்பாரா?. நாம் இன்றைக்கு அவரை, இயேசுவை பொக்கிஷமாக தெரிந்து கொள்ள வேண்டும். அவரை விட இந்த உலகத்தில் ஒரு மேலான பொக்கிஷம் நமக்கு இல்லை. அவரை நாம் பொக்கிஷமாக ஏற்றுக் கொள்ளாமல் உலகத்தையும், பணத்தையும் சுகபோக வாழ்க்கையையும் பொக்கிஷமாக தெரிந்து கொண்டால், அதற்காகவே வாழ்ந்தால் நாம் எவ்வளவு பரிதாபத்திற்குரியவர்கள்.

மோசேயின் வாழ்க்கையை பாருங்கள் எபி 11:26-ல் எகிப்தில் உள்ள பொக்கிஷங்களிலும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை பாக்கியம் என்று எண்ணினான். தேவனைப் பொக்கிஷமாக கருதாமல், பொக்கிஷமாக வைக்காமல் வாழ்கின்ற ஒவ்வொருவரும் எவ்வளவு பரிதாபத்திற்குரியவர்கள் என்பதை தெரியாமல் வாழ்கிறார்கள். லூக் 12:21-ல் பாருங்கள் தேவனிடத்தில் ஐசுவரியவானாக இராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். காரணம் அவனுடைய வயலில் கோதுமை நன்றாக விளைந்தது, சேர்த்து வைக்க இடமே இல்லாமல் களஞ்சியத்தை இடித்து, இடித்து பெரிதாக்கி, சேகரித்துக் கொண்டே இருந்தான். கடைசியாக யாரும் எதிர்பாராத வேளையில்

> **இந்த உலகத்தில் பணம், பொருள், சொத்தைக் காட்டிலும் தேவனே நமது பொக்கிஷமாக, செல்வமாக, ஐசுவரியமாக இருக்க வேண்டும்.**

அனைத்தையும் விட்டு பரிதாபமாக மரித்துப் போனான்.

சமீபத்தில் எனக்குத் தெரிந்த ஒரு சகோதரன், எங்களை நேசிக்கிறவர் திருமணமாகி குழந்தைகளும் இல்லை, திரளான வியாபாரங்கள், தொழில்கள், சம்பாதித்துக் கொண்டே இருப்பார். ஆனால் யாருக்கும் உதவி செய்யவோ, ஏழைகளுக்கு இரங்கவோ, ஊழியங்களை ஆதரிக்கவும் மாட்டார்.

கடைசியாக அவர் பரிதாபமாக மரித்து போனார். இன்றைக்கு அவர்

சேர்த்து வைத்தது எல்லாம் யார் யாரோ அபகரித்து எல்லாம் சூறையாடப்பட்டது. தேவனைப் பொக்கிஷமாக வைக்காமல், பணத்தையும், சொத்தையும் பொக்கிஷமாக சேர்க்கிறவர்களுடைய வாழ்க்கை இப்படித்தான் பரிதாபமாக முடிகிறது. அதனால் தான் இயேசு சொன்னார் தேவனைப் பொக்கிஷமாக கருதாமல், அவரை புறக்கணிக்கிறவனுடைய நிலை இப்படித்தான் இருக்கும் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற

> **இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறது என்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை எங்கள் சரீரமாகிய மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்**

என் அன்பு சகோதர, சகோதரிகளே நம் வாழ்க்கை எப்படி இருக்கிறது?.

அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையைப் பாருங்கள். ஆசியாவிலேயே மிகப்பெரிய சொத்துக்கு அதிபதியாய், கோடீஸ்வரராக வாழ்ந்த அவர் கிறிஸ்துவின் மேல் வைத்த அன்பின் நிமித்தம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை பொக்கிஷமாக தெரிந்து கொண்டார். மலேசியாவில் பிரசித்தி பெற்ற விமான நிறுவன முதலாளி, தொழில் அதிபர் பல கோடிகளுக்கு, சொத்துக்களுக்கு, விமானங்களுக்கு சொந்தக்காரர். ஆனால் அவருடைய ஒரே மகனோ துறவரம் பூண்டு புத்த மதத்திலே தன்னை இணைத்துக் கொண்டு எல்லாவற்றையும் விட்டுவிட்டு போய்விட்டார். உலகத்தின் மனிதனே இயேசு யார் என்று தெரியாத வரை இப்படி பொக்கிஷங்களை இழந்து வாழும் போது நாம் தேவனை நேசிக்கிறவர்கள், அவரை பின்பற்றுகிறவர்கள் எவ்வளவு அதிகமாக நம் வாழ்வில் தேவனை பின்பற்ற வேண்டும். தேவனை பொக்கிஷமாக கருத வேண்டும். ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுலால் தைரியமாய் சொல்ல முடிந்தது.

2 கொரி 4:7-ல் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறது என்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை எங்கள் சரீரமாகிய மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்றார். ஆகவே இன்றைக்கு தேவனைப் பின்பற்றுகிற நாம் ஒவ்வொருவரும் தேவனை பொக்கிஷமாக வைத்து அவரையே நம்முடைய செல்வமாக மாற்றி ஏற்றுக் கொண்டு, மற்றவைகளின் மேல் கண்களை பதிய வைக்காமல் தேவனுக்காக பூமியிலே மகிமையாக வாழ்வோம். இப்படிப்பட்ட வாழ்க்கையின் மேல் தேவன் பிரியமாய் இருக்கிறார் .

## பொக்கிஷங்களை திறந்தார்கள்

இன்றைக்கு உலகத்தில் திறக்கப்பட்ட பொக்கிஷங்கள், திறக்கப்படாத பொக்கிஷங்கள் என்று இருக்கிறது. சமீபத்தில் பத்திரிக்கையில் விளம்பரம் வந்தது. வங்கிகளில் உரிமை கோரப்படாத பணங்கள் நிறைய இருக்கிறது. அதேபோல் லாக்கரில் திறக்கப்படாத பொருள்கள் இருக்கிறது. உடனே வங்கிகளை அனுகி அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று செய்தி வந்தது. இன்றைக்கு அதைப்போல தான் தேவப்பிள்ளைகளின் இருதயமும் பொக்கிஷங்களால் நிறைந்திருக்கிறது. மத் 12:35 சொல்லுகிறது நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து

நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான் என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். ஒவ்வொரு ஜெபிக்கின்ற மனிதனுக்குள்ளும், வசனத்தை தியானிக்கிற மனுஷனுக்குள்ளும் நல்ல பொக்கிஷங்கள் உண்டாயிருக்கிறது. ஏசா 33:6-ல் பூரணரட்சிப்பும், ஞானமும், அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும். கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்.

ஆம் நாம் இருதயத்தில், உள்ளத்திலே தேவனுடைய பொக்கிஷங்கள், புதையல்கள் மறைந்து கிடக்கின்றன. தோன்டப்படாமல், மனிதர்களுடைய கண்களுக்கு வெளிப்படாமல் இருக்கின்றன. அதைத் தேட வேண்டும். கடலின் ஆழத்தில் இருக்கிற முத்துக்களை, பொக்கிஷங்களை கண்டுபிடிக்க வேண்டும். இதைத்தான் ஆண்டவராகிய இயேசு சொன்னார் மத் 13:52-ல் பரலோக ராஜ்யத்திற்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டு தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக் கிறான் என்றார். இன்றைக்கு நாம் வீணாக இயேசுவை ஆராதிக்கவில்லை, வீணாக ஜெபிக்கவில்லை, வீணாக பின்பற்றவில்லை. நம்மை பொக்கிஷமாக, பொக்கிஷ சாலையாக மாற்றும் வரை தேவன் நம்மை அளவில்லாமல் நிரப்பிக் கொண்டே இருக்கிறார். அதை ஒவ்வொரு நாளும் தேவனுக்கு முன்பாக திறந்து காட்ட வேண்டும்.

அன்னாளுடைய வாழ்க்கையைப் பாருங்கள், தன் இருதயத்தை, உள்ளத்தை திறக்காமல் பல நாளாய் மௌனமாய் இருந்தாள். வீணாக ஆலயத்திற்கு சென்று, வீணாக, வெறுமையாக திரும்பி வந்தாள், ஆனால் ஒரு நாள் தேவனுக்கு முன்பாக தன் இருதயத்தை திறந்து காண்பித்தாள். 1 சாமு 1:13,15-ல் அன்னாள் தன் இருதயத்தில் பேசினாள். அதாவது ஆண்டவருக்கு முன்பாக திறந்து காட்டினாள். அதை தான் நான் கர்த்தருடைய சந்நிதானத்தில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன் என்றாள். இதைத்தான் மத் 2:11-ல் இயேசுவை காண, தரிசிக்க நட்சத்திரத்தால் சாஸ்திரிகள் வழிநடத்தப்பட்ட போது இயேசுவை கண்ட மாத்திரத்திலேயே தங்கள் பொக்கிஷங்களை திறந்தார்கள். அப்பொழுது அந்த பொக்கிஷத் திலிருந்து பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் காணிக்கையாக

> **நம்மை பொக்கிஷமாக, பொக்கிஷ சாலையாக மாற்றும் வரை தேவன் நம்மை அளவில்லாமல் நிரப்பிக் கொண்டே இருக்கிறார்.**

கொண்டு வந்தார்கள். ஆம் இன்றைக்கு இயேசுவின் திறக்கப்பட்ட இருதயத்திலிருந்து இரத்தமும், நீரும் வந்தபோது அதினால் கழுவப்பட்டவர்கள், அவரை விசுவாசித்தவர்கள் பொன்னாக மாறினார்கள், சுத்த தங்கமாக, பரிசுத்தமாக உருவாக்கப்பட்டார்கள்.

நம்முடைய இருதயத்திலே பரிசுத்தம் இருக்க வேண்டும், அது நாளுக்கு நாள் நம்மில் பெருக வேண்டும்.
யோசு 6:19-ல் சகல வெள்ளியும், பொன்னும், வெண்கலத்தினாலும், இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமானவைகள் அவைகள் கர்த்தரின் பொக்கிஷங்களில் சேரும் என்றார். நம்முடைய

பொக்கிஷங்களில் பொன்னாகிய பரிசுத்தம் உண்டாக வேண்டும், பெருக வேண்டும். கர்த்தரின் ஆலயத்தில் சேர்க்கப்பட வேண்டும். அவைகள் தான் நம்முடைய இருதயத்தை நிரப்ப வேண்டும். இப்படியாகத்தான் யோபு சுத்தவானாக மாற்றப்பட்டார். ஆகவே தான் அவர் சொல்லுகிறார் யோபு 23:10-ல் அவர் என்னை சோதித்த பின்பு பொன்னாக விளங்குவேன் என்றார்.

அடுத்து பொக்கிஷங்களைத் திறந்த போது தூபவர்க்கங்களையும், வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக கொடுத்தார்கள். ஆம் தேவனுடைய பொக்கிஷமாகிய நம்முடைய இருதயத்தை திறக்கிற போது ஜெபங்களும், துதிகளும், நறுமணங்களும் உண்டாக வேண்டும். பெரும் வெள்ளத்திலிருந்து தப்பிய நோவா தேவனுக்கு பலி செலுத்திய போது தேவன் அந்த பலியை சுகந்த வாசனையாக நுகந்தார், ஏற்றுக்கொண்டார். அதை தேவனுடைய பொக்கிஷங்களில் சேர்க்கப்பட்டது. நம்முடைய பொக்கிஷம் ஒவ்வொரு நாளும் தேவனுக்கு உகந்த வாசனையாக, நறுமணமாக இருக்க வேண்டும். அதுதான் நல்ல பொக்கிஷசாலை. இதைதான் தேவன் விரும்புகிறார். திறக்கப்பட்ட பொக்கிஷ சாலையாக, கர்த்தருக்குப் பிரியமான நல்ல பொக்கிஷ சாலையாக நாம் மாற வேண்டும். இதைதான் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

ஆனால் எசேக்கியா ராஜாவை பாருங்கள் தேவன் அவனைக் காப்பாற்றி, சுகம் கொடுத்து ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுத்த போது தேவனுக்கு தன் பொக்கிஷ சாலையை திறந்து காட்டுவதற்கு பதிலாக தன்னுடைய எதிரியாகிய ராஜாவுக்கு தன்னுடைய கருவூலம், பணம், வருமானம், வசதி வாய்ப்பு எல்லா வற்றையும் திறந்து காட்டி தேவனை துக்கப்படுத்தினான். 2 இராஜா 20:13-ல் எசேக்கியா அவர்களை அங்கீகரித்து பின்பு அவர்களுக்கு தன் பொக்கிஷ சாலை அனைத்தையும் வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்க்கங்களையும், நல்ல பரிமள தைலத்தையும், தன் பொக்கிஷ சாலையில் உள்ள எல்லாவற்றையும் திறந்து காட்டினான். ஆண்டவருக்கு திறந்து காட்டாமல் மனிதனுக்கும், பாபிலோன் ராஜாவுக்கும் திறந்து காட்டி தேவ கோபத்திற்குள்ளாகி விட்டான். இதனால் அடுத்த வருடத்திலேயே

> **தேவனுடைய பொக்கிஷமாகிய நம்முடைய இருதயத்தை திறக்கிற போது ஜெபங்களும், துதிகளும், நறுமணங்களும் உண்டாக வேண்டும்.**

அவனுடைய பொக்கிஷம் எல்லாம் பாபிலோன் ராஜாவினால் கூறையாடப்பட்டு எல்லாவற்றையும் இழந்தான். தேவனுக்கு முன்பாக மாத்திரம் தான் நம்முடைய மேன்மைகளையும், வசதி, வாய்ப்புகளையும் திறந்து காட்டிட வேண்டும். நீரே என்னை உயர்த்தினீர், நீரே இவைகளை எனக்கு தந்தீரென்று தேவனை மகிமை படுத்தாமல், மனிதனுக்கு முன்பாக தன் பணத்தைக் குறித்து செல்வத்தை குறித்து மேன்மை பாராட்டி தன் மேன்மையை கெடுத்துக் கொண்டார். அதனால் அவன் பொக்கிஷசாலை கூறையாடப்பட்டு சரிவை சந்தித்தான். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்து கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே ஆண்டவராகிய தேவன் அவருடைய பொக்கிஷாலையாக உங்களை மாற்றி பாதுகாத்து நடத்துவாராக.



சகோதரி
கலா வின்சென்ட்ராஜ்

# சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**

நாம் இந்த உலகத்தில் பிறக்கும் போது பெற்றோர், உறவினர், உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்கள். அவரவர் வாழ்விற்கு ஏற்ற வசதிகள் கூட இருக்கிறது. நாம் வளர வளர கல்வி, வேலை, வருமானம் என்று வளர்ந்து வருகிறது. எல்லா நிலைகளிலும் நம் தேவனாகிய கர்த்தர் நம்மோடிருக்கிறார். 2 சாமு 5:10-ல் தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தார். 1 நாளா 11:9-லும் இதையே வாசிக்கிறோம். தாவீதோடு கூட சேனைகளின் கர்த்தர் இருந்ததினால் அவன் நாளுக்குநாள் விருத்தியடைந்தான், வளர்ந்தான். ஏசா 51:15-ல் உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே! அலைகள் கொந்தளிக்கத்தக்கதாய் சமுத்திரத்தை குலுக்குகிற சேனைகளின் கர்த்தர் என்கிற நாமமுள்ளவர் என்கிறார். சமுத்திரத்தையும், வானத்தையும், பூமியையும், உண்டாக்கினவர் அவரே! அவர் சமுத்திரத்தை குலுக்குகிறவர். அவர் சேனைகளின் கர்த்தர் அவர்தான் நம்மோடிருக்கிறார். ஏசா 54:5-லும் உன் சிருஷ்டிகரே உன் நாயகர். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார் என்று ஏசாயா சொல்லுகிறார். அதனால் தான் சங் 46:7 சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறார். அந்த சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்.

## தேவனுடைய சேனை

யாக்கோபுடைய வாழ்வில் அண்ணனின் ஆசீர்வாதத்தை அபகரித்து, மாமன் வீட்டில் அடிமையாய் வாழ்ந்து, தன் மனைவிகளோடே திரும்பின போது, லாபான் துரத்தி வருகிறான். தேவன் யாக்கோபோடே நன்மையேயன்றி

தீமை ஒன்றும் பேசாதே என்று எச்சரித்தார். அவர்களோடே பேச்சு வார்த்தை, உடன்படிக்கை எல்லாம் முடித்த பின்பு, லாபான் தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை முத்தம் செய்து போய் விட்டான். அந்த இடத்திலிருந்து யாக்கோபு புறப்பட்டு பிரயாணம் பண்ண ஆரம்பித்த போது ஆதி 32:1,2 தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான். நம்முடைய வாழ்விலும் இதுவரை அடிமைப்பட்ட இடத்திலிருந்து இனி இது வேண்டாம் எழுந்து என் தகப்பன் வீட்டிற்கு செல்வேன் என்று தீர்மானித்து, நாம் ஒரு தீர்மானம் செய்து செயல்படும் போது நம்மையும் தேவதூதர்கள் சந்தித்து நடத்துவார்கள். அவர்கள் தேவனுடைய சேனைகளாய் இருக்கிறார்கள்.

பல வருடங்கள் மாமன் வீட்டில் வாழ்ந்த யாக்கோபு மனைவிமார்கள், பிள்ளைகள், வேலைக்காரர்கள், ஆடுகள், பொருள்கள் இவைகளை சுமந்து கொண்டு பிரயாணம் போக வேண்டும். பலவித சிரமங்களை அவன் சந்திக்க நேர்ந்திருக்கும். ஆனால் தேவசேனை அவர்களை சந்தித்து. எபி 1:7,14-ல் தேவதூதர்களைக் குறித்தோ, தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார். இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களி னிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? என்று வாசிக்கிறோம். தேவனுடைய சேனை யாக்கோபுக்கு என்ன பணிவிடை தேவையோ அந்த பணிவிடைகளை செய்து ஒத்தாசை செய்திருப்பார்கள், இல்லாவிட்டால் அந்த வனாந்தரத்தில் அவனால் பிரயாணம் செய்திருக்க முடியாது.

இயேசு கெத்சமனேயில் ஜெபம் பண்ணி பிதாவே! என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணும் போது லூக் 22:43-ல் அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான் என்று வாசிக்கிறோம். நம்மையும் பெலப்படுத்த ஒத்தாசை செய்ய தேவன் நமக்கும் தூதர்களை அனுப்புவார். அதுமட்டுமல்ல அவன் தன் சகோதரன் ஏசாவுடன் ஒப்புரவாக, சமாதானமாக ஆட்களை அனுப்புகிறான். ஏசாவுடன் சமாதானம் ஆவதற்கு முன்பாக யாக்கோபின் மனதை, வாழ்வை தேவன் சீர்படுத்தி, இனி நீ யாக்கோபு என்று என்னப்படாமல் இஸ்ரவேல் எனப்படுவாய் என்று அவனை ஆசீர்வதித்தார். அதன் பின்பாக ஏசாவை அவன் எதிர்கொள்ளும் போது, ஏசா எதிர்கொண்டு ஓடி வந்து அவனைத் தழுவி, அவன் கழுத்தை கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்தான். இருவரும் அழுதார்கள், நல்ல ஒரு சமாதானம் அவனுக்குள் உண்டானது. தேவனோடும், மனிதனோடும் ஒப்புரவாகி சமாதானமாய் யாக்கோபு தன் வாழ்வை தொடர்ந்தான். இன்றும் நம் கண்ணுக்கு தெரியாத தூதர்கள் நாம் வாழ்வை தேவனோடும், மனிதர்களோடும் இணைக்க உதவுகிறார்கள்.

மரியாளை மறைவாக விலக்கி விட நினைத்த நீதிமானாகிய யோசேப்பு சொப்பனத்தில் தோன்றி உன் மனைவியாகிய மரியாளை ஏற்றுக்கொள்ள பயப்படாதே! அவள் கருவுற்றிருப்பது பரிசுத்த ஆவியால் தான் என்று பேசி மரியாளை ஏற்றுக்கொள்ள செய்ததையும், வயதான காலத்தில் கருவுற்றிருக்கிற எலிசபெத்திற்கு உதவி செய்ய, மரியாளுக்கு அந்த செய்தியை அறிவித்ததும், இயேசு உயிர்த்து விட்டார் அவர் இங்கே இல்லை என்று துயரத்தோடு தேடிவந்த பெண்களுக்கு அறிவித்ததும், பேதுரு சிறைச்சாலையில் அடைபட்டிருந்தபோது காப்பாற்றி வெளியே கொண்டு வந்ததும் இன்னும் எத்தனையோ ஒத்தாசைகளை இந்த தேவசேனை செய்ததை வாசிக்கிறோமே! அதனால் தான் தாவீது தன் சங்கீதத்தில் சங் 103:20,21-ல் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தருக்குப்

பிரியமானதைச் செய்து, அவர் பணிவிடைகாரரா யிருக்கிற அவருடைய சர்வ சேனைகளே! அவரை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்கிறார்.

ஏசாயா உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் ஆண்டவர் வீற்றிருக்க கண்டபோது சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்று தமது ஆறு செட்டைகளால் முகத்தையும், கால்களையும் மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பூமி அனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டு சொன்னார்கள். ஏசா 6:2,3 இந்த இடத்தில் தேவதூதர்கள் இறங்கி வந்து கர்த்தரை உயர்த்தினார்கள். ஏசாயாவுக்குள் ஒருமனம், திருப்புதல் உண்டானது. ஐயோ! அதமானேன்! அசுத்த உதடுகள் உள்ள மனுஷன் என்று உணரவும், அறிக்கையிடவும், ஒரு சுத்திகரிப்பும், ஊழிய அர்ப்பணிப்பும் உண்டானதை நாம் பார்க்கிறோம். மத் 26:53ல் இயேசுவை பிடிக்க போர்ச்சேவகர்கள் வரும்போது பேதுரு ஒருவனை காதற வெட்டினான். அப்பொழுது இயேசு அவனை கடிந்து கொண்டு நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர் 12 லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? என்றார். அப்படியானால் அவருடைய சேனை எவ்வளவு திரளாய் இருக்கிறது. மத் 18:10ல் இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று இயேசு சொன்னார். எவ்வளவு திரள் தூதர்கள் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தூதன் அல்ல, திரள் சேனையை ஆண்டவர் நமக்காக வைத்திருக்கிறார். அவர்கள் நமக்கு பணிவிடை செய்வார்கள்.

ஆண்டவரோடு ஒப்புரவாக, மனுஷரோடு ஒப்புரவாக தூண்டுவார்கள். நம் வாழ்வில் துதிக்கவும், பரிசுத்தமாகவும், ஆண்டவருக்காக ஏதாவது செய்யவும் வழி நடத்துவார்கள். சிறைச்சாலை கதவுகளை திறந்து தடைகளை தகர்த்து வெளியே கொண்டு வந்து நடக்க வேண்டிய நல்ல காரியங்களை நடத்த உதவுவார்கள்.

## மகா பெரிய சேனை

தாவீது ராஜாவான பிறகு நாளுக்குநாள் விருத்தி அடைந்தான். 1 நாளா 12:22 அக்காலத்திலே நாளுக்குநாள் தாவீதுக்கு உதவி செய்யும் மனுஷர் அவனிடத்தில் வந்து சேர்ந்தபடியால் அவர்கள் தேவ சேனையைப் போல் "மகா சேனையானார்கள்" தாவீதோடு ஒரு பெரிய சேனை சேர்ந்து கொண்டது. சேனைகளின் கர்த்தர் தாவீதோட இருந்ததினால் மகா பெரிய சேனையாக மாறினான். நாலாயிரம் பேரை வாசல் காக்க, நாலாயிரம் பேரை துதி செய்ய ஏற்படுத்தினான். தனி ஆளாக உதவியற்று இருக்கிறேன் என்று கலங்குகிறீர்களா? சேனைகளின் கர்த்தர் தாவீதோடு இருந்தபோது மனிதர்கள் சேனையாக அவனோடு சேர்ந்து கொண்டார்கள். அதுபோல நம்மையும் அவர் கைவிடமாட்டார்.

எகிப்திற்கு வெறும் 70 பேராக யாக்கோபின் குடும்பம் சென்றது. ஆனால் அங்கே 430 வருஷம் அடிமைகளாய் இருந்து, தேவன் அவர்களை மீட்டு வெளியே கொண்டு வரும்போது யாத் 12:41-ல் 430 வருஷம் முடிந்த அன்றைய தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் கூட்டம், கூட்டமாய் பெரிய சேனையாய் புறப்பட்டார்கள். இந்தப் பெரும் கூட்டத்தைக் கண்டு பாலாக் ராஜா பயந்தான். எப்படியாவது இந்த ஜனத்தை சபித்து விடு. அவர்கள் திரளாய் பெருகி இருக்கிறார்கள் என்று பிலேயாமை அழைத்தான். பிலேயாம் கூலிக்காக இஸ்ரவேலர் பாவம் செய்வதற்கான இடறலை போட்டு விட்டான். வெளி 2:14 அப்படி சொல்கிறது விக்கிரங்களுக்கு படைத்ததை புசிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடங்களை இஸ்ரவேல் புத்திரர் முன்பாக போடும்படி பாலக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாம்

என்று வாசிக்கிறோம். ஆண்டவருக்கு எது அருவருப்பானதோ அதை செய்ய வைத்தான். விக்கிரக ஆராதனை, விபச்சாரம் இது இரண்டிலும் தவறிவிட்டால் தேவன் அவர்கள் மேல் கோபமாகிவிடுவார் என்றும், இஸ்ரவேலர் மகா சேனையாய் இருப்பவர்களை குறைந்து போக வழி சொல்லி விட்டான். இஸ்ரவேலர் தேவனுக்கு எதிராக பாவம் செய்தபோது வனாந்தரத்தில் மடிந்தார்கள். கர்த்தர் நீதி உள்ளவர், தமது ஜனம் பாவம் செய்தால் விட்டு விட முடியாது அவர்களுக்கும் ஏற்ற சிட்சையைக் கொடுத்து மனம் திருப்புகிறவர்.

எலிசா யெகூவை இஸ்ரவேல் தேசத்தின் மேல் ராஜாவாக அபிஷேகம் செய்த போது யெகூ பாகால்களின் பணிவிடைக்காரர்களை தந்திரமாய் அழித்தான். ஆண்டவரின் இருதயத்தை கவர்ந்த ஒரு நல்ல ராஜா. 2 இராஜா 10:30,32 கர்த்தர் யெகூவை நோக்கி நீ என் பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச் செய்து, என் இருதயத்தில் இருந்தபடியெல்லாம் ஆகாபின் குடும்பத்துக்கு செய்தபடியினால், உன் குமாரர் இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின் மேல் நாலு தலைமுறையாக வீற்றிருப்பார்கள் என்றார். ஆனால் யெகூ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தின்படி தன் முழு இருதயத்தோடும் நடக்கக் கவலைப்படவில்லை. இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணின யெரொபெயாமின் பாவங்களை விட்டு அவன் விலகவும் இல்லை. அந்நாட்கள் முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்து போகப் பண்ணினார். மகா பெரிய சேனை குறைந்தது. நாமும் கூட ஆண்டவருக்காக பெரிய காரியங்களைச் செய்தாலும் ஆண்டவரின் கட்டளைகளை முழு இருதயத்தோடு கடைபிடித்து நடக்கக் கவலைப்படாமல் இருக்கிறோமா என்று ஆராய்ந்து பார்ப்போம். முழு இருதயத்தோடு கடைபிடித்து நடக்க உதவும் ஆண்டவரே! என்று ஜெபிப்போம்.

யோவாஸ் என்ற ராஜாவும் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தவன். ஆசாரியன் யோய்தா மரித்ததும் வழிமாறி விக்கிரகங்களை, சிலைகளை சேவிக்க ஆரம்பித்தான். இந்த குற்றத்தினிமித்தம் இஸ்ரவேல் மேல் கோபம் மூண்ட போது சகரியா எச்சரித்தான். அவனை கல்லெறிந்து கொன்றான். சீரியாவின் சேனை சிறு கூட்டமாய் வந்திருந்தாலும் 2 நாளா 24:24-ல் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விட்டபடியினால் கர்த்தர் மகா பெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார். எத்தனை வேதனையான காரியம் பாருங்கள். தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், வேறொன்றை வழிபடுவதும் எத்தனை பெரிய தீங்கு பாருங்கள். இதிலிருந்து விடுபட வழி உண்டா? எசேக்கியேல் புத்தகத்தில் உலர்ந்த எலும்புகள் பள்ளத்தாக்கில் மகா திரளாய் கிடந்தது. அந்த எலும்புகள் உயிரடைய வழி இல்லை. ஆனால் ஆண்டவர் தீர்க்கதரிசியை பார்த்து, நீ தீர்க்கதரிசனம் உரை! என்னவென்றால் உலர்ந்த எலும்புகளே கர்த்தருடைய வார்த்தைகளை கேளுங்கள். இதோ நான் உங்களுக்குள் ஆவியை பிரவேசிக்க பண்ணுவேன். அப்பொழுது உயிரடைவீர்கள் என்றார். நரம்புகள், மாம்சத்தை உண்டாக்கி தோலினால் மூடி, உங்களின் ஆவியை கட்டளை யிடுவேன். அப்பொழுது நீங்கள் உயிரடைந்து நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள் என்று கர்த்தர் சொன்னார். அப்படியே ஒரு பெரிய அசைவு உண்டானது. நரம்புகளும், மாம்சமும் உண்டாகி தோலினால் மூடி, ஆவியை, நான்கு திசைகளிலும் இருந்து வந்து கொலையுண்ட, உலர்ந்து இருக்கிற இவர்கள் மீது வீசும்படி ஊது என்றார். எசே 37:10 எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து காலூன்றி மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

இந்த உலர்ந்த எலும்புகள் நீங்களும், நானும் தான். அதே அதிகாரம் 11 வசனத்தில் இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே! என்கிறார் ஆண்டவர். ஏதோ ஒரு காரியத்தில் கீழ்படியாமல் கர்த்தரை அசட்டை பண்ணி, அவர் கட்டளைகளை முழு இருதயத்தோடு கடைபிடிக்க கவலைப்படாமல், விட்டு விலகி வேறொன்றை

நாடிவிட்டதால் குறைந்து போனோமா? நாம் எந்த நிலையில் இருந்தாலும் கர்த்தருடைய வார்த்தையை திரும்பவும் தேடி வாசிக்க வாசிக்க அது நமக்கு ஆவியாயும் ஜீவனுமாயிருக்கும். யோவா 6:63-ல் ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்றார். வேத வசனங்களில் இருக்கும் ஜீவன் ஆவியானவரின் பலன் நம்மை திரும்பவும் நிரப்பும். உலர்ந்து போன, நம்பிக்கை இழந்த நம்மை உயிர்ப்பித்து மகா பெரிய சேனையாய் தேவன் நம்மை நிச்சயமாய் எழுப்புவார். உன் 6:13-ல் திரும்பி வா, திரும்பி வா சூலமித்தியே, நாங்கள் உன்னை பார்க்கும்படிக்கு திரும்பி வா, திரும்பி வா, சூலமித்தியில் நீங்கள் எண்ணத்தைப் பார்க்கிறீர்கள். அவள் இரண்டு சேனையின் கூட்டத்துக்குச் சமானமானவள் என்று சாலமோன் சொல்கிறான். முழு இருதயத்தோடும், வாஞ் சையோடும் ஆண்டவரிடம் திரும்பினால் மகா பெரிய இரண்டு சேனைக்கு சமமாவோம்.

## சேனைகளின் கர்த்தாவே!

சேனைகளின் கர்த்தாவே என்று இப்படி அவரை கூப்பிட்டு ஜெபம் பண்ணி தப்பித்தவர்கள் ஏராளம். சங் 84:1,3,8,12 சேனைகளின் கர்த்தாவே! உம்முடைய வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானது. என் ராஜாவும், என் தேவனாகிய சேனைகளின் கர்த்தாவே, தேவனுடைய சமூகத்தை வாஞ்சையாய் தேடி, அடைக்கலான் குருவிகெல்லாம் உம் பக்கத்தில் இருக்கும் பாக்கியம் இருக்க எனக்குத் தாரும். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே என் விண்ணப்பத்தை கேளும், யாக்கோபின் தேவனே செவிகொடும், சேனைகளின் கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்று துதித்தான் தாவீது. அதனால் தான் கோலியாத் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம். சிங்கத்தையும், கரடியையும் நான் கொன்றேன். விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தன் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான் என்று கோலியத்தை பார்த்து நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் என்னிடத்தில் வருகிறாய். 1 சாமு 17:45-ல் நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய ராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தருடைய நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். சேனைகளுடைய கர்த்தர் அவர் நாமத்தில் கோலியத்தை ஒரு ஆயுதமும் இல்லாமல் வீழ்த்தி முழு இஸ்ரவேலுக்கும் ஜெயம் பெற்று கொடுத்தான்.

சனகெரிப் இஸ்ரவேலின் தேவனை நிந்தித்து எசேக்கியாவையும் தூசித்தபோது ஏசா 37:15,16-ல் கர்த்தரை நோக்கி சேனைகளின் கர்த்தாவே, கேருபின்களின் மத்தியில் வாசம் பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே என்று கூப்பிட்டு அவன் ஜெபம் பண்ணும் போது கர்த்தர் அந்த ஜெபத்தை கேட்டார். சனகெரிப்பை சங்கரித்து தம் ஜனத்துக்கு நன்மை செய்தார். சக 1:12-ல் கர்த்தருடைய தூதன் சேனைகளின் கர்த்தாவே இந்த 70 வருஷமாய் நீர் கோபம் கொண்டிருக்கிற எருசலேமின் மேலும் யூதா பட்டணங்களின் மேலும் எந்த மட்டும் இரங்கா திருப்பீர் என்று கேட்டபோது ஏசா 37:16,17-ல் மனதுருக்கத்தோடு எருசலேமின் இடத்தில் திரும்பினேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஆலயம் அதிலே கட்டப்படும், எருசலேமின் மேல் அளவு நூல் பிடிக்கப்படும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூறு என்றார். இன்னும் என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பி இருக்கும் இன்னும் கர்த்தர் சீயோனை தேற்றரவு பண்ணுவார். இன்னும் எருசலேமை தெரிந்து கொள்வார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று பின்னும் கூறு என்று சகரியா தீர்க்கதரிசி மூலமாக ஆண்டவர் சொல்லுகிறார். சேனைகளின் கர்த்தர் அவர் நாமும் சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். கடந்த நாட்களில் ஒருவேளை எதில் தவறு இருந்தாலும் குறைவுகள் இருந்தாலும் முழுமனதோடு அவரிடம் திரும்பி மன்னிப்பை பெற்று ஆசீர்வதிக்கப்படுவோம்.







# மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம்




மதுரை பட்டணத்தில் உள்ள மக்களின் இரட்சிப்பிற்காக, அங்கு ஒரு எழுப்புதல் உண்டாக ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமைகளில் எழுப்புதல் உபவாச ஜெபம் நடத்தப்படுகிறது. ஜனவரி 17ஆம் தேதி நடைபெற்ற ஜெபத்திற்கு தேவன் திரளான மக்களை அழைத்து வந்தார். சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை நடத்தினார்கள். ஆராதனை வேளையில் கர்த்தர் அந்த இடம் முழுவதும், வந்த மக்கள் எல்லார் மேலும் அசைவாடினார். அநேகர் ஆவியில் களிகூர்ந்தார்கள். ஆத்துமாவில் விடுதலையை பெற்றார்கள். சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்கள் எலியாவை போல இந்த மதுரை பட்டணத்தில் தேவனுக்காக செயல்படும் ரதமும் குதிரை வீரருமாக நீங்களும் நானும் இருக்க வேண்டும் என்று தேவ ஆவியானவர் மூலமாகப் பேசினார். இந்த வார்த்தைகள் ஒவ்வொருவருக்குள்ளும் தேவனுக்காக வைராக்கியமாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தை ஏற்படுத்தியது. சகோதரர். வின்சென்ட செல்வகுமார் அவர்கள் மதுரை பட்டணத்தில் கர்த்தர் எழுப்புதலை உண்டாக்க வேண்டும் என்பதையும், கடைசி கால எழுப்புதல் பற்றியும் ஆவியானவர் அவர்கள் மூலமாக தெளிவாகப் பேசினார். ஜெபத்திற்கு வந்திருந்த மக்கள் இன்னும் அதிகமாய் திறப்பில் ஜெபித்தால் தான் இனிவரும் நாட்களில் வெற்றியாக வாழ முடியும் என்பதை அறிந்து கொள்ளவும், தேவனுடைய ஆசீர்வாதத்தையும், புதிய அபிஷேகத்தையும், விடுதலையும் பெற்றுச் சென்றார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரம் மாத்திரமல்ல, சரீர பிரகாரமான ஆகாரமும் கொடுக்க தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக..







# கூப்பிடுகிற யாவருக்கும் நன்மை செய்கிறவர்

சாட்சி பகுதி

## 1. சகோதரி. ஷகிலா – சென்னை

கடந்த நாட்களில் நான் என் சரீர சுகத்திற்காக, எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்க, என் அப்பா, அம்மா இரட்சிப்பிற்காக ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். நான் ஒவ்வொரு முறையும் ஜெபிக்க கேட்கும் போது சகோதரி அவர்கள் மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு அற்புதம் செய்தார் நல்ல சரீரசுகத்தை தந்தார், நிரந்தரமான வேலை கிடைக்கச் செய்தார், அப்பா அம்மா இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுக்க உதவி செய்தார். என்னை சாட்சியாக நிறுத்தின தேவனுக்கே கோடான கோடி ஸ்தோத்திரம்.

## 2. சகோதரி. ஜெயராணி – நாகர்கோவில்

என் மகளின் மருத்துவ படிப்பில் உள்ள தடைகள் உடைய, மேற்படிப்பிற்கு சீட் கிடைக்க, தேவ பாதுகாப்பிற்காக, தேவைகள் சந்திக்கப்பட, தேவன் அற்புதம் செய்ய ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தாங்கள் என் மகளின் மேற்படிப்பிற்காகவும், நல்ல மனநிலைக்காகவும் பாரத்தோடு ஜெபித்தீர்கள். தேவன் ஜெபத்திற்குப் பதில் தந்தார். ஜோத்பூர் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியில் எம்.சி.ஹெச் படிப்பிற்கான சீட் கிடைக்க தேவன் கிருபை செய்தார். அவருக்கே எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக. ஜெபித்த உங்களுக்கு நன்றி.

## 3. சகோதரி. லூர்துமேரி – தூத்துக்குடி

கடந்த 11–ஆம் தேதியன்று மதிய உணவிற்காக என் வீட்டில் நான் குக்கரில் சாப்பாடு வைத்துவிட்டு இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதஇதழை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் எழுதியிருந்த தேவ வார்த்தை என்னை மிகவும் தேற்றினது. அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்ற வார்த்தை என்னை மிகவும் தொட்டது. இந்த நிலையில் குக்கர் வெடித்து பறந்தது. சாப்பாடு எல்லாம் கொட்டியது. ஆனால் தேவாதி தேவன் என் மீது ஒன்றும் படாமல், ஒரு சேதமும் எனக்கு நேரிடாமல் என்னைப் பாதுகாத்தார். எனக்கு நன்மை செய்து என்னை சாட்சியாக வாழ வைத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

## 4. சகோதரி. சாராள் – மதுரை

நான் ஒவ்வொரு மாதமும் நடக்கும் எழுப்புதல் உபவாச ஜெபத்தில் கலந்து கொள்வேன். கடந்த மாதத்தில் ஒரு நாள் நான் சமைத்துக் கொண்டிருக்கும் போது என் வீட்டில் கேஸ் சிலிண்டர் காலி ஆகிவிட்டது. சமையல் பாதியில் நின்று விட்டது. ஆனால் எனக்கு சரியான பசி, நான் கர்த்தரிடத்தில் நம்பிக்கையோடு கேட்டேன், சாரிபாத் விதவையின் வீட்டில் எண்ணெயும், மாவும் அள்ள அள்ள குறையாது இருந்தது போல இப்பொழுது என்னுடைய அடுப்பு எரிய வேண்டும் என்று ஜெபம் பண்ணி விட்டு போய் அடுப்பை பற்ற வைத்தேன் அடுப்பு எரிந்தது, என்னை பசியினால் வருந்த விடாமல் நான் சமைத்து சாப்பிட செய்த கர்த்தருக்கு நன்றி.

## இயேசு வாழ்கிறார்
## ஊழியத்தோடு இணைந்து
## சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

---

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

### 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

### 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

### 4) GOOGLE PAY

GPAY TO , 944 300 9333,

### 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை ,
மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு செய்தி

# இந்தியாவின் புதிய வலிமை



இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான உறுதிப்பாட்டை விரைவுப் படுத்துவதில் அணுசக்தியின் பங்கு மேலும் சக்தி வாய்ந்ததாகிறது. தூய்மையான, நம்பகத்தன்மை கொண்ட, நீண்டகால சக்தி ஆதாரமாக விரிவடைந்து, உள்நாட்டுத் தொழில்நுட்பங்களை அமல்படுத்தி, ஆராய்ச்சித் திறன்கள் மற்றும் நவீனத் திட்டங்களுடன் உருவெடுத்து, உலகளாவிய அணுசக்தி நாடுகளிடையே இந்தியா தற்போது உறுதியுடன் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இம்முயற்சிகளுடன், நீடித்த, பாதுகாப்பான மற்றும் எதிர்காலத்தில் எரிசக்தியில் தற்சார்பு என்ற நிலையை நோக்கி இந்தியா முன்னேறுகிறது.

வளர்ச்சியடைந்த இந்தியாவின் பெரிய நோக்கங்களை அடைய எரிசக்தி நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், படிம எரிபொருட்களை சார்ந்து இருப்பதை குறைக்கவும் மத்திய அரசு நீண்டகால மிகப்பெரிய முன்னேற்றங்களுக்குத் எரிசக்தி மாற்றத் திட்டத்தின் கீழ், திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, 2047ம் ஆண்டிற்குள் 100 ஜிகா வாட் அணுசக்தித் திறனை அடைவது என்ற லட்சிய இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இந்த நோக்கங்களை அடைய உள்நாட்டு அணுசக்தி தொழில்நுட்பம், பொது தனியார் கூட்டாண்மைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதுடன் உத்தி சார்ந்த தலையீடுகள் மற்றும் உள் கட்டமைப்பு முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எரிசக்திப் பாதுகாப்பை அடைவதற்கான முக்கியப் பகுதியாக அணுசக்தி அங்கீகரிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்காக அணுசக்தி இயக்கத்தை அரசு தொடங்கியுள்ளது. இந்த முன்முயற்சி, உள்நாட்டு இந்தியாவின் அணுசக்தித் திறனை விரிவுபடுத்துவதற்கான அரசின் முன்முயற்சிகள்" அதிகரித்து வரும் எரிசக்தித் தேவைகளை பூர்த்தி செய்யவும், சுற்றுச்சூழல் இலக்குகளை அடையவும் இந்தியா தமது அணுசக்தித் திறனை விரிவுபடுத்துகிறது. தற்போது 8,780 மெகாவாட் அளவிற்கு அணுசக்தி உற்பத்தி செய்யப்படும் நிலையில் 2031,32-க்குள் 22,480 மெகாவாட் அளவிற்கு அதிகரிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குஜராத், ராஜஸ்தான், தமிழ்நாடு, ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 8,000 மெகாவாட் திறனுள்ள பத்து உலைகளை அமைத்து தொடங்குவது உள்ளிட்டவை இந்த விரிவாக்கத்தில் அடங்கும். 2031,32-க்குள் மேலும் பத்து உலைகளை அமைப்பதற்கான முதல் நிலைப் பணிகள் தொடங்கியுள்ளன. மேலும், 2024 செப்டம்பர் 19 அன்று, அணுசக்தித் துறையில் நாடு மிகச்சிறந்த சாதனையை எட்டியது. நாட்டின் மிகப் பெரிய அணு உலைகளில் ஒன்றான, மூன்றாவது உள்நாட்டு அணு உலையான ராஜஸ்தான் அணுமின் திட்டத்தின் 7வது அலகு முக்கிய கட்டத்தை அடைந்தது. இது உள்நாட்டுத் தொழில்நுட்பம் மூலம் வளர்ந்து வரும் இந்தியாவின் திறன் மற்றும் உள்நாட்டு அணு உலைகளை இயக்குவதற்குமான அடையாளமாகும்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002

## காங்கேயத்தில்

# சுவிசேஷ கூட்டம்

நேரம் : தினமும் மாலை 6.00 மணிக்கு
இடம் : CSI ஆலயம், காங்கேயம், திருப்பூர் மாவட்டம்.

**பிப்ரவரி 27,28 & மார்ச் 1**
வெள்ளி, சனி, ஞாயிறு



EVG.L.வின்சென்ட்ராஜ்
EVG.கலா வின்சென்ட்ராஜ்

தொடர்புக்கு
94428 00449, 94980 00449

## கோவையில்

# லெந்து கால கன்வென்ஷன் கூட்டம்

**மார்ச் 6,7,8**
வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம் : தினமும் மாலை 6.00 மணிக்கு
இடம் : CSI தூய இம்மானுவேல் ஆலயம், அவினாசி ரோடு, கமிஷனர் அலுவலகம் அருகில், உப்பிளிப்பாளையம், கோவை மாவட்டம்.



தேவ செய்தியாளர்கள்
EVG.L.வின்சென்ட்ராஜ்
EVG.கலா வின்சென்ட்ராஜ்

தொடர்புக்கு : 94428 00449, 98945 75831

RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023

வானத்தின் வாசலில்

# சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாம்

நேரம் : தினமும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை
இடம் : வானத்தின் வாசல் சுவிசேஷ மையம், செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

தேவ செய்தியாளர்கள்

தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார்
சகோ. வின்சென்ட்ராஜ்,
சகோதரி கலாவின்சென்ட்ராஜ்

நாள்
ஏப்ரல் 30 &
01,02,03
மே 2026

அனுமதி இலவசம்



இந்த முகாமில் கலந்து கொள்வதற்கு முன்பதிவு செய்ய
soe.jesuslives.in

முன்பதிவு அவசியம்

தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447

TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.